tamilguru.lk

10-279/1

---

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவையின் தரம் II அதிகாரிகளுக்கான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2025**

இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவையின் தரம் II அதிகாரிகளுக்கான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2026ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து விண்ணப்பம் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" கீழ் "Online Applications-Recruitment Exams / E.B. Exams" விண்ணப்பங்களை ஆன்லைனில் மட்டுமே சமர்ப்பிக்கலாம் (ஆன்லைன் Online). ஆன்லைன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2025, நவெம்பர் 03 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறந்து 2025, திசெம்பர் 01 ஆந் திகதி பி.ப. 9.00 மணிக்கு மூடப்படும். விண்ணப்பத்தை ஆன்லைனில் சமர்ப்பித்த பிறகு, அதைப் பதிவிறக்கம் செய்து, அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையெழுத்தில் நிரப்பி, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றளித்து, சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றிதழுடன் சமர்ப்பிக்கவும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தை அடையும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

- ❖ விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.

குறிப்பு:

02. இந்தப் பரீட்சை பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2023 மற்றும் தொடர்புடைய பாடத்திட்டங்கள் மற்றும் விதிகளின் படி நடத்தப்படும். 2020.07.06 ஆந் திகதி அன்று வெளியிடப்பட்ட புதிய சேவை விதிமுறைகளில்; குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை மேற்கொள்ளப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக, பாடத்திட்டம் மற்றும் வேறு விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

03. பரீட்சை பற்றிய விவரங்கள்

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்த மதிப்பெண்* | *சித்தி அடையும் மதிப்பெண்* |
|---|---|---|---|
| 01. தாபன விதிக் கோவையின் நிறுவன நடைமுறை அறிவு (Practical Knowledge of the Establishment System) | மணி. 03 | 100 | 40% |
| 02. தொழில்நுட்பக் கல்விச் சட்டம் (Law on Technical Education) (தொழில்துறை கல்விச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்படுகின்றன) | மணி. 01 | 100 | 40% |
| 03. தொழில்நுட்பக் கல்வியின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை Administration & Supervision of the Technical Education | மணி. 02 | 100 | 40% |

(2020.07.06 முதல் அமுலில் உள்ள தொழில்நுட்பக் கல்வி சேவைச் சட்டத்தின்படி, இரண்டாவது வினாத்தாள் இரண்டு பகுதிகளாக நடைபெறும்) )

04. பரீட்சை நடாத்தும் அதிகாரம் : பரீட்சை ஆணையாளர் நாயகம்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| *இலக்கம்* | *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 1. | தாபன விதிக் கோவையின் நிறுவன நடைமுறை அறிவு (Practical Knowledge of the Establishment System) | காரியாலய நடைமுறை மதிப்பீடு, சம்பள உயர்வு செலுத்துதல் பயணச் செலவுகளை செலுத்துதல், பல்வேறு விடுவிப்புகளுக்கான அனுமதி, புகையிரத சேவை அனுமதிகளுக்கான கோரிக்கை, அரசாங்க வீட்டு ஒதுக்கீடுகள், கடன் கோரிக்கை கடிதப் போக்குவரத்து, தொழிற்சங்க உறுப்பினர் உரிமைகள் மற்றும் அரச அதிகாரிகளின் அரசியல் உரிமைகளைக் கையாளும் போது அதிகாரிகள் நடைமுறையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை ஆராய தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம். |
| 2. | தொழில்நுட்பக் கல்விச் சட்டம் Law on Technical Education (தொழில்துறை கல்விச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்படுகின்றன) | I. 2006 ஆண்டில் தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள்.<br>II. 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்டம்.<br>III. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையகத்தின் கீழ் நிறுவப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) மதிப்பீட்டு செயல்முறை.<br>IV. தொழில் நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளில் நடாத்தப்படும் பாடத்திட்டங்களின் அங்கீகார செயல் முறை.<br>V. பாடத் திட்ட அபிவிருத்தி முறை. |
| 3. | தொழில்நுட்பக் கல்வியின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை Administration & Supervision of the Technical Education | தொழில்நுட்ப கல்வி நிர்வாகம்<br>I. தொழில் நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளில் நிர்வாக செயல் திட்டம் (Action plan) மூலோபாய / புள்ளிவிபர முகாமைத்துவ திட்டம் (strategic management plan) மனித/ பௌதீக வள முகாமைத்துவம், முகாமைத்துவ பாடநெறி.<br>II. தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மற்றும் தொடர்புடைய திணைக்களத்தின் அமைச்சு.<br>a. திணைக்களம் மற்றும் அமைச்சகத்தின் கொள்கைகள்.<br>b. தொழில் நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் அமைச்சகம் மற்றும் அதன் திணைக்கள அமைச்சகத்தின் கீழ் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு மற்றும் அவற்றின் செயல்பாடுகள் உட்பட.<br>c. தேசிய மற்றும் பிராந்திய அளவிலான கல்வித் திட்டமிடல் நோக்கங்களும் அவற்றின் செயல்படுத்தலும்.<br>III. தொழில்நுட்பக் கல்வி முகாமைத்துவ தகவல் கூட்டம்.<br>IV. தொழில்நுட்பக் கல்வி தொடர்பான விசேட கல்வித் திட்டங்கள். |

| இலக்கம் | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|---|
| | | தொழில்நுட்ப கல்வி மேற்பார்வை<br>I. தொழில் நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளில் கண்காணிப்பதற்கான திட்டம் மற்றும் செயல்பாடுகளின் தொடர்ச்சியான மதிப்பீட்டிற்கான அளவுகோல்கள்.<br>II. தொடர் மதிப்பீட்டுத் திட்டங்கள்<br>- தொழில் நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுய மதிப்பீட்டுத் திட்டம்.<br>- திணைக்களத்தின் தொழில் நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளின்(technical college) மேற்பார்வை மற்றும்<br>தொழில் நுட்பக் கல்லூரிகளால் தொழில் நுட்பக் கல்லூரிகளின்(college of technology) மேற்பார்வை<br>III. வெளிப்புறக் குழுக்களால் உள் மதிப்பீடுகளை ஏற்றுக் கொள்வது.<br>அந்தத் திணைக்களத்தின் எந்த அமைச்சகத்தையும் சேர்ந்தது என்பதையும், அத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக் கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் வேறு அறிக்கைகள் பற்றியும் போதுமான அறிவைப் பெறுவது நல்லது. |

**குறிப்பு –** அனைத்து வினாத்தாள்களும் குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வகை வினாக்களைக் கொண்டிருக்கும்.

06. II வது வினைதிறன் தடை தாண்டல் பரீட்சைக்கு திட்டமிடப்பட்ட பாடங்களை ஒரே நேரத்தில் அல்லது பல தனித்தனி சந்தர்ப்பங்களில் எழுதலாம்.

07. பரீட்சை மொழி மூலம் :

I. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

II. பொது சேவையில் சேருவதற்கு விண்ணப்பதாரர் தான் எழுதிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலமோ அல்லது போட்டிப் பரீட்சை இல்லாமல் பொதுச் சேவையில் சேர்ந்தவர்கள் பொது சேவையில் சேர தகுதி பெறும் வகையில் பரீட்சை எழுதிய மொழி மூலமோ தனது விடைகளை எழுத வேண்டும்.

III. விண்ணபப்பதாரி தனக்குத் தகுதியில்லாத மொழி யில் பரீட்சை எழுதுவது கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். பரீட்சையில் கலந்து கொள்ள விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

08. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது 2023.03.29ம் திகதியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2023 மற்றும் 2023.09.27 ஆம் திகதியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2023 ஆகியவற்றின் விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

09. ஆன்லைன் (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் ஆன்லைனில் சமர்ப்பிக்கும் மென் பிரதியும், பதிவு அஞ்சல் மூலம் சமர்ப்பிக்கும் அச்சுப் பிரதியும் (Printout) பரீட்சைத் திணைக்களத்தால் இரண்டும் பெறப்பட்டவுடன், மென் பிரதியும் அச்சிடப்பட்ட பிரதியும் சரிபார்க்கப்படும் (Verify) விண்ணப்பம் செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதைக் குறிக்கும் ஒரு குறுஞ்செய்தி (SMS), மொபைல் தொலைபேசி எண்ணுக்கு அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாக வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். ஆன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான (Instructions) வழிமுறைகளைப் பதிவிறக்கவும். விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது வழிமுறைகளை கவனமாகப் பின்பற்றவும். அச்சிடப்பட்ட பிரதியினைப் பெற்ற பிறகு விண்ணப்பப்படிவத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகக் கருதப்படாது.

முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

விசேட தேவைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினால், அவர்கள் விண்ணப்பத்தில் இதைக் குறிப்பிட வேண்டும், மேலும் தொடர்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதியினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

10. தவறான தகவல்களை வழங்குதல் - விண்ணப்பத்தை நிரப்பும் போது சரியான தகவல்களை வழங்குவதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்தப் பரீட்சையின் விதிகளின் படி எந்தவொரு பரீட்சை யாளரும் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படலாம்.

11. விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியினை 2025 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் அமைப்புக் கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். பரீட்சையின் பெயர் அட்டையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதித் திகதிக்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்ற அடிப்படையில், தொடர்புடைய பரீட்சைக் கட்டணம் செலுத்தினால், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசி திகதியில் அல்லது அதற்கு முன் செலுத்தப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை அனுமதி அட்டைகளை ஆன்லைனில் வழங்குவர்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங் கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் அறிவிப்பு வெளியிடப்படும். உங்கள் அனுமதி அட்டை உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தெரிவிக்க வேண்டும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேவைப்பட்டால், விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை உறுதிப்படுத்த பரீட்சைத் திணைக்களத்தால் வைத்திருக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் பொருந்தினால் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் பிரதியினை மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினை தயாராக வைத்திருப்பது உதவியாக இருக்கும் ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சை எழுதுவதற்கான அனுமதியாக கருதப்படக் கூடாது.

**குறிப்பு** – மேலே உள்ள பந்தி 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்ப தாரர்களால் சமர்ப்பிக்கப்படும் அடுத்தடுத்த புகார்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

13. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும். கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சான்றழிக்கப்பட வேண்டும்.

14. பரிந்துரைக்கப்பட்ட பரீட்சை எண்ணின் கீழ், ஒரு பரீட்சார்த்தி தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை அறையில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சை எழுதும் ஒவ்வொரு பரீட்சாத்தியும் தனது கையொப்பத்துடன் கூடிய நுழைவுச் சீட்டை பரீட்சை நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். முறையாக தனது நுழைவுச் சீட்டை சமர்பிக்காத பரீட்சாத்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

15. பரீட்சை மண்டபத்தில், ஒவ்வொரு பாடத்திற்கும் தங்கள் அடையாளத்தை நிருபிப்பதற்கு, பரீட்சை கண்காணிப்பாளரின் திருப்திக்கு ஏற்ப சான்றுகளை வழங்குவது பரீட்சையாளர்களின் பொறுப்பாகும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் பாஸ்போட் (கடவுச் சீட்டு) அல்லது ;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம் (Driving License)

மேலும், பரீட்சை எழுதுபவர்கள் தங்கள் முகத்தை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இதனால் அவர்களின் அடையாளத்தை சரிபார்க்க முடியும் மற்றும் அவர்களின் மின்சாதன தொடர்புடைய சாதனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. உங்கள் அடையாளத்தை நிருபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை அறைக்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள். மேலும், அவர்கள் பரீட்சை அறைக்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை அவர்கள் முகக்கவசம் இல்லாமல் இருக்க வேண்டும்.

16. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) முதல் முறையாக விண்ணப்பிக்கும் போது கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) அதன் பிறகு, ஒவ்வொரு முறையும் ஒரு பாடத் திற்கும் ரூ. 400.00 கட்டணம்

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, இணைய வழி முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

I. எந்த வங்கி கிரெடிட் காட் மூலமும் (Any Bank Credit Card) ;

II. ஆன்லைன் கட்டண வசதியுடன் கூடிய எந்த வங்கி டெபிட் காட் மூலமாகவும் (Any Bank Debit Card with the facility of Internet Transactions)

III. இலங்கை வங்கியின் இணைய வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிடப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது எப்படி என்பது குறித்த வழிமுறைகள், பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டதாக உங்களுக்கு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும், மேலும் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பல்ல.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திரும்பப் பெறப்படாது அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படாது.

17. இந்தப் பரீட்சையை நடத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும.; விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்குப் பரீட்சாத்திகள் உட்பட்டவர்கள். இந்த விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை மீறினால், அவர் அல்லது அவள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அபராதத்திற்கு ஆளாக நேரிடும்.

18. பரீட்சை முடிவுகள்

I. பரீட்சைக்குத்தோற்றிய அனைத்து பரீட்சாத்திகளின் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேறு ஆவணங்கள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செய லாளருக்கு வழங்கப்படும்.

19. இந்த வர்த்தகமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்; வெளியிடப்பட்ட அந்த செய்திக்குறிப்பின் மொழி பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும்வர்த்தகமானிகளுக்குஇடையிலானவேறுபாடு/ முரண்பாடு இருப்பதாக தோன்றினால் சிங்கள மொழி வர்த்தமானி கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

20. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயத்திலும் முடிவெடுக்கும் உரிமை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

நாலக கலுவேவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு.
இசுருபாய,
பத்தரமுல்ல,
2025, ஒற்றோபர் 21.

10-451